

கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (15.4.2026) காணொலிக் காட்சி வாயிலாக ஒன்றிய பா.ஜ.க. அரசு நாளை நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டு வரப்போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றுவது குறித்து கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஏற்பாட்டில் கழக வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி ஆதரித்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, 9 வது வார்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களிடம் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார்.

### ‘திராவிட நாயகர்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# மிடுக்கோடு முன்னேற்றம் கண்டுள்ள மீனவர் சமுதாயம்!

## தனிக்கவனம் செலுத்தி சிறப்பான திட்டங்கள் நிறைவேற்றம்!

**சென்னை, ஏப். 16-**

**திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீனவர் சமுதாயத்தின் மீது தனிக் கவனம் செலுத்தி சிறப்பான பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். மீன் வளர்ச்சித்துறை என்பதை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை என்று பெயர் சூட்டி மீனவர்கள் நலன் காப்பதில் மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறார்.**

**இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட படகுகளுக்கு உயர்த்தப்பட்ட நிவாரணம்**

● இலங்கை அரசால் 2018 முதல் 2023 வரை கைப்பற்றப்பட்டு அங்கு மீட்க இயலாத நிலையில் சேதமடைந்துள்ள 107 விசைப்படகு உரிமையாளர்களுக்கு நிவாரண தொகை ரூ.5 இலட்சம் என்பதை ரூ.6 இலட்சம் வீதமும், 16 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு ரூ.1.50 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் வீதமும் உயர்த்தப்பட்டு ரூ.6.74 கோடி வழங்கப்பட்டுள்ளது.

● அதேபோல இலங்கையில் 2024 முதல் 2025 பிப்ரவரி வரை மீட்க இயலாத அளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 73 விசைப்படகு உரிமையாளர்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6 இலட்சம் என்பது ரூ.8 இலட்சம் வீதமும், 9 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு ரூ.1.50 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் வீதம் உயர்த்தப்பட்டு மொத்தம் ரூ.6.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**காணாமல்போன மீனவர் குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட நிவாரணம்**

● கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவித்தொகை ரூ.250 என்பது ரூ.350 ஆக உயர்த்தப்பட்டு ஒரு மீனவ குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,500 வீதம் வழங்கப்படுகிறது. இந்த தின உதவித்தொகை ரூ.350 என்பது ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி, 2025–2026 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

● 1.6.2020 முதல் 18.10.2021 வரை மீனவர் காப்பீடு இல்லாத காலத்தில் மீன் பிடிக்கச் சென்று உயிர் இழந்த 205 மீனவர் குடும்பங்களுக்கு விபத்துக் காப்பீடு நிவாரணத் தொகை தலா ரூபாய் 2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.4.10 கோடிவழங்கப்பட்டுள்ளது. நிரந்தர ஊனமடைந்த ஒரு மீனவருக்கு ரூபாய் 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

● 2016 முதல் 2021 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மீன்பிடிக்கச் சென்று விபத்தில் சிக்கி இறந்த குடும்பங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த நிவாரணத் தொகை தலா ரூ.2 இலட்சம் வீதம் 25 மீனவ குடும்பங்களுக்கு 2023–இல் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

● இனிவரும் காலங்களில் மீன் பிடிக்கச் சென்று விபத்தில் சிக்கி காணாமல் போகும் மீனவ குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ.50 இலட்சம் சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

● 2022–இல் மாண்டஸ் புயலால் சேதமடைந்து மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்காக ரூ.4.67 கோடி நிவாரணத் தொகை படகு உரிமை யாளர்களுக்கு வழங்கப்பட்டது.

● 5.12.2023 அன்று எண்ணூர் கொசத்தலை ஆற்றில் கச்சா எண்ணெய் கலந்ததால் எண்ணூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களின் சேதமடைந்த படகுகள், வலைகளுக்காக ரூ3.66 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

● 4.12.2023 அன்று மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, காஞ்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட மீனவர்களின் படகுகள் முதலியவற்றிற்கான வாடகைக் கட்டணம்; பணியில் ஈடுபட்டிருந்த மீனவர்களுக்குச் செலவினம் என ரூ.1.70 கோடி வழங்கப்பட்டதுடன்; சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்காகவும் ரூ.12.88 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

● அதேபோல, 15.12.2023 முதல் 17.12.2023 வரை தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்த மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட படகுகள் முதலியவற்றிற்கு ரூ.99 இலட்சமும், சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்காக ரூ.14.53 கோடியும் நிவாரணமாக வழங்கப்பட்டது.

● 2024 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஃபெஞ்சல் புயலின் போது மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட 300 படகுகள் மற்றும் 648 மீனவர்களுக்கு செலவினம் ரூ.90 இலட்சமும், சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்கு ரூ.2.537 கோடி இழப்பீடும் வழங்கப்பட்டது.

● தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் விபத்தில் இறந்த மீனவருக்கு தலா ரூ.5 இலட்சமும், விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மீனவருக்கு ரூ.25 ஆயிரம் வீதமும் வழங்கப்படும் நிவாரணத்தின்படி; 2021 முதல் 4 ஆண்டுகளில் மாநில அரசின் 40 சதவீதத் தொகையாக ரூ.6.82 கோடி



வழங்கப்பட்டுள்ளது.

● மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2021 முதல் இதுவரை மீன்பிடிக்கச் சென்று விபத்தில் இறந்த மற்றும் காயமடைந்த 482 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.23.31 கோடி காப்புறுதி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

● மீனவ இளைஞர்கள் ஐ.ஏ.எஸ் முதலிய போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்காக அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையத்தில் ஆறுமாத காலச் சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 39 மாணவர்களுக்கு ரூ.5.20 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை**

● மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை ரூ.5 ஆயிரம் என்பது ரூ.8 ஆயிரமாக உயர்த்தப்பட்டு 8,76,032 மீனவ குடும்பங்களுக்கு ரூ.545.83 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**மீன்பிடிக் குறைவு காலச் சிறப்பு உதவித் தொகை**

● மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடிக் குறைவு காலச் சிறப்பு உதவித் தொகை 2021 முதல் ரூ.5,000 என்பது ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டு; 9,13,394 மீனவ குடும்பங்களுக்கு ரூ.548.01 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**கடல் மீனவர் சேமிப்பு – நிவாரணத் திட்டம்**

● 2022 –2023 ஆம் ஆண்டு முதல் திராவிட மாடல் அரசின் திட்டமாகச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் 10,17,226 மீனவர்களுக்கு ரூ.304.61 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**கடல் மீனவர் மகளிர் சேமிப்பு – நிவாரணத் திட்டம்**

● 2021 –2022 ஆம் ஆண்டு முதல், இத்திட்டத்தின் கீழ் 10,05,390 மீனவ மகளிருக்கு ரூ.301.02 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திர மயமாக்கும் திட்டம்**

● இத்திட்டத்தின் கீழ் 3,591 பேர் 40 சதவீத மானியத்தில் மொத்தம் ரூ.21.6 கோடி மதிப்பில் உள் பொருத்தும், வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

**மீனவர்களுக்கு உயிர்க்காப்புச் சட்டைகள்**

● பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 75 விழுக்காடு மானியத்தில் ரூ.4.49 கோடியில் 40 ஆயிரம் உயிர்க்காப்புச் சட்டைகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

● தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரங்களைத் திரவ எரிவாயு மூலம் இயங்கும் இயந்திரங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 175 மண்ணெண்ணெய் இயந்திரங்களை

● ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் மாற்றம் செய்திட அனுமதிக்கப்பட்டு மீனவப் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**மீன்பிடித் தொழில் மேம்பாட்டிற்கான உள் கட்டமைப்பு வசதிகள்**

● 7 கடலோர மாவட்டங்களில் ரூ.742.96 கோடியில் மீன்பிடி இறங்கு தளங்கள், தூண்டில் வளைவுகள், கடலரிப்பைத் தடுக்கும் அமைப்புகள் ஆகியவை 44 இடங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

● தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகப் பகுதி ரூ.5 கோடி செலவில் தூர் வாரி, ஆழப்படுத்திச் சீரமைக்கப்பட்டுள்ளது.

● பூம்புகார் மீன்பிடித் துறைமுகத்தின் முகத்துவாரத்தில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்று திரும்பும் படகுகளைக் கண்காணித்திட சக்தி வாய்ந்த இழுவை இயந்திரம் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

● மயிலாடுதுறை மாவட்டம் பழையாறு மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணி, ரூ.26.26 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்கு தளம் ரூ.10 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

● கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் அலைத் தடுப்புச் சுவர் நீட்டிப்பு பணி ரூ.116 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

● புதிய மீன்பண்ணை கட்டுமானம், புனரமைத்தல், நவீனமயமாக்கம் பணிகள் ரூ.60.20 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

● தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அணையில் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் கட்டும் பணி ரூ.8 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

● நெல்லை மாவட்டத்தில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் வண்ண மீன் சில்லரை விற்பனையகம் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

● நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் ரூ.2.50 கோடி செலவில் அரசு ட்ரவுட் மீன் பண்ணை நவீன மயமாக்கப்பட்டுள்ளது.

● இராமநாதபுரம் மாவட்டம் குத்துக்கல் மீன் இறங்கு தளத்தில் ரூ.4 கோடி ஒதுக்கீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

● திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 13 கிராமங்களில் ரூ.56 கோடி செலவில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

● தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் ரூ.10 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

● நாகை மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுது பார்க்கும் தளம் போன்ற வசதிகள் ரூ.81 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

● குமரி மாவட்டம் விவேகானந்தா பாறை படகு நிறுத்தம் முனையத்தில் புதிய படகுகள் நிறுத்திட கூடுதல் படகு அணையும் தளம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

● தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடில் ரூ.41 கோடி செலவில் அலை தடுப்புச் சுவர் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மீனவர் நல வாரியம்**

● தமிழ்நாடு மீனவர் நல வாரியம் வாயிலாக 23,660 பயனாளிகளுக்கு பல்வேறு உதவித்தொகை திட்டங்களின் கீழ் ரூ.31.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களில் மீனவர் சமுதாய மாணவ, மாணவிகள்**

இளநிலை பட்டப்படிப்புகளில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த 250 மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழும், அதேபோல 143 மாணவர்கள் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழும் மாதம் ரூ.1000 ெற்றுப் பயனடைந்துள்ளனர்.


இவை போல திராவிட மாடல் ஆட்சியில் மீனவர் நலன் மற்றும் மீன்வளத் துறையில் சிறப்பான திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு மீனவ சமுதாயம் மிடுக்கோடு முன்னேற்றம் கண்டுள்ளது.

# சென்னைத் தெற்கில் பத்தாயிரம் வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*சென்னை, ஏப்.16-*

*பா.ஜ.க. அரசின் தொகுதி மறுசீரமைப்பு சதித்திட்டத்திற்கு எதிராக தலைவரின் அறிவிப்பின்படி சென்னை தெற்கு மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றப்படும் என மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார். அவரது அறிவிப்பு வருமாறு:-*



*இந்தியா என்பது வெறும் மாநிலங்கள் என்ற நிர்வாக அலகுகளைக் கொண்டதல்ல வேறுபட்ட மக்களினங்களைக் கொண்ட ஒரு ஒன்றியம். இந்த ஒன்றியம் நிலைக்க வேண்டுமெனில் நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு மக்களினத்திற்கும் சமமான இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.*

*மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறைத் திட்டம் கைவிடப்பட வேண்டும் என்ற கழகத் தலைவரின் ஆணைக்கிணங்க இன்று 16-4-2026 அனைவரின் வீடுகளிலும் கருப்புக் கொடி ஏற்ற அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அனைவரும் கருப்புக் கொடிகளை கையில் ஏந்தி நமது எதிர்ப்பை டெல்லிப் பாசிஸ்டுகளுக்கு உணர்த்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.*

*கழகத் தலைவரின் அறிவார்ந்த ஆலோசனையையேற்று சென்னைத் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பதினொறு பகுதிக் கழகங்கள், 82 வட்டக் கழகங்கள், இரண்டு ஒன்றியங்களில் உள்ள 10 ஊராட்சிகளில் உள்ள பத்தாயிரம் வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றப்படுகிறது. அதற்கான பணிகளை பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் மேற்கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

### சட்டப்பேரவை பொதுத் தேர்தல் 2026 : தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு!

சென்னை, ஏப்.16-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளரும் தமிழ்நாடு கேபிள்டிவி ஆப்ரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவருமான தஞ்சை கோ.ஜீவா அவர்கள், 14.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அனைத்து தொகுதிகளிலும் தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் களப்பணியாற்றி அவர்களின் வெற்றிக்கு பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்.